**சார்பு நீதிமன்றம், திருவொற்றியூர்**

**O.S. No. 116/2023**

இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியின் வாக்குமூலம் 04.06.2025 ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

தங்கராஜ் (PW1)

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் செய்யப்படும் குறுக்கு விசாரணை

பிரதிவாதியை எனக்கு கடந்த 30 வருடங்களாக தெரியும். நானும் பிரதிவாதியும்ஒரே துணிகடையில் 15 வருடங்களாக பணிபுரிந்தோம். நான் தாவாவில் குறிப்பிட்டுள்ள பணபரிவர்த்தனை முன்பாகவும் பிரதிவாதிக்கு கடனாக பணம் கொடுத்துள்ளேன். அவைகளை அவர் திருப்பி செலுத்திவிட்டார். கடந்த 04.01.2021 அன்று நான் பிரதிவாதிக்கு கடனாக பணம் கொடுத்தேன். நான் கடனாக அவருக்கு ரூபாய் 2,50,000 கொடுத்தேன். நான் வேறு நபர்களுக்கு வட்டிக்கு பணம் கொடுக்கவில்லை. நான் பிரதிவாதிக்கு கடன் தொகையை பணமாக கொடுத்தேன். நான் பிரதிவாதிக்கு 2 தவணைகளாக ரூ.2 லட்சம் மற்றும் ரூபாய் 2 லட்சம் மற்றும் ரூபாய் 50,000 ம் கடனாக கொடுத்தேன். 04.01.2021 அன்று ரூபாய் 2 லட்சம் கொடுத்தேன் பின்பு 10 நாட்கள் கழித்து அவருக்கு ரூ.50000 கொடுத்தேன். பிரதிவாதி கடன் பெற்ற போது அவர் கடனுறுதி சீட்டு எழுதி கொடுத்தார் அந்த கடன் உறுதி சீட்டில் பிரதிவாதி மகன் வினோத்குமார் என்பவரும் கையொப்பம் இட்டுள்ளார் என்று சொன்னால் சரிதான். கடனுறுதி சீட்டில் உள்ள விவரங்களை எனது மகன் செந்தில்குமார் என்பவர் பூர்த்தி செய்தார். நான் வருமான வரி எதுவும் தாக்கல் செய்யவில்லை. கடனுறுதி சீட்டில் பிரதிவாதியின் மகன் வினோத்குமார் சாட்சியாக கையொப்பம் இட்டுள்ளார். பிரதிவாதி கடன் பெற்ற பின் வட்டிக்காக பணம் எதுவும் கொடுக்கவில்லை. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதியின் மகனாக வினோத்குமார் என்பவரின் பெயரில் உள்ள மனையை கிரையம் செய்து கொடுத்து அ தன் மூலம் கிடைக்கும் தொகையை கொண்டு என்னிடம் அசல் மற்றும் வட்டி தொகையை செலுத்துவதாக உறுதி கொடுத்துள்ளார்ன் என்றால் சரிதான். நான் பிரதிவாதிக்கு கடனாக அவருக்கு ரூபாய் 2 லட்சத்து 50 ஆயிரம் வேறு நபரிடம் இருந்து பெற்றுத் தருவதாக கூறி அவரது மகன் வினோத்குமார் என்பவரின் பெயரில் உள்ள மனை சம்மந்தமான கிரைய பத்திரத்தை பெற்றுக்கொண்டும் கடன்உறுதி சீட்டில் பிரதிவாதி மற்றும் அவரது மகனின் கையொப்பம் பெற்றுக்கொண்டும் கடனாக பணம் ரூபாய் 2 லட்சத்து 50 ஆயிரத்தை கடனாக வாங்கி கொடுக்காமல் இருந்து வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கடனாக அவரிடம் ரூபாய் 2 லட்சத்து 50 ஆயிரம் கொடுத்துள்ளேன். பிரதிவாதி என்னிடம் இருந்து தான் கடன் கேட்டார் நான் பிரதிவாதிக்கு கடனாக பணம் கொடுத்தேன். வேறு நபரிடம் இருந்து பணம் பெற்றுத்தருவதாக நான் கூறவில்லை. நான் பிரதிவாதியிடம் இருந்து கிரைய ஆவணம் எதுவும் பெறவில்லை. கிரைய ஆவணத்தின் நகல் மட்டுமே என்னிடம் கொடுத்தார். நான் பிரதிவாதிக்கு ரூபாய் 2 1/2 லட்சம் கடனாக கடன் கொடுத்ததாக இவ்வழக்கிற்காக பொய்யாக கூறகிறேன் என்றும் பணம் பெற்றுத்தருவதாக பொய்யாக கூறி பிரதிவாதியிடம் முறைகேடாக கடன்உறுதி சீட்டில் கையொப்பம் பெற்றுக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கடன் வாங்கி

கொடுக்காததால் பிரதிவாதி என்னிடம் அவரி எழுதி கொடுத்த கடன்உறுதி சீட்டையும், கிரைய ஆவணத்தையும் திருப்பி தர கேட்டபோது நான் அந்த ஆவணங்களை அவரிடம் திருப்பி செலுத்தாமல் அந்த கடன்உறுதி சீட்டின் அடிப்படையில் தவறாக சங்கதிகளை குறிப்பிட்டு பிரதிவாதிக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியிடம் நான் கிரைய ஆவணத்தை பெற்றுக்கொண்டு அதனை அடமானம் வைத்து பணம் பெற்றுக்கொண்டு அந்த பணத்தை பிரதிவாதியிடம் கொடுக்காமல் இருந்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் நான் இவ்வழக்கில் அந்த கிரைய ஆவணத்தின் அசலை தாக்கல் செய்யாமல் அதன் நகல் மட்டுமே தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் அசல் ஆவணத்தை கொடுக்கவில்லை. பிரதிவாதி என்னிடம் கடனாக ரூபாய் 2 1/2 லட்சம் பெறவில்லை என்றும் நான் அவரிடம் இருந்து மோசடியாக நான் கடனுறுதி சீட்டில் கையொப்பம் பெற்றுள்ளேன் என்றும் அந்த தவறான கடன்உறுதி சீட்டின் அடிப்படையில் நான் பிரதிவாதியிடம் இருந்து தாவா தொகையை கோர முடியாது என்றும் பிரதிவாதி எனக்கு பணம் எதுவும் கொடுக்க கடமைபட்டவர் அல்ல என்றும் நான் தாக்கல் செய்த இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்று சொன்னால் சரியல்ல. நான் மோசடியாக பிரதிவாதியடம் இருந்து பெற்ற கிரைய ஆவணத்தின் அசல் மற்றும் கடன்உறுதி சீட்டு ஆகியவைகளை பிரதிவாதியிடம் ஒப்படைக்க கடமைபட்டர் நான் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typed before me in the Open Court read over to the witness in Tamil and admitted by the witness to be correct.

S/d. S. Prabha Thomas
Subordinate Judge,
Thiruvottiyur.